இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 169 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 16 – புதன்கிழமை 29 ஜனவரி 2025 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 169 : Thiruvalluvar Year - 2056 - Thai 16 - Wednesday 29 January 2025 - Madurai 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.1.2025) விழுப்புரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், விழுப்புரம் மாவட்டத்தில் 424 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் 231 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 133 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 116 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், து.ரவிக்குமார், எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் கே.எஸ்.மஸ்தான், ஆர்.இலட்சுமணன், அன்னியூர் சிவா, ஏ.ஜெ.மணிகண்ணன், சி.சிவகுமார், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.ஜி.சம்பத், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வ.தட்சிணாமூர்த்தி, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘திராவிடம்’தான் நவீன தமிழ்நாட்டை உருவாக்கியது!

# கழக வரலாறு; சமூக நீதி - இடஒதுக்கீடு கட்டமைப்பிலானது!

## விழுப்புரம் அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமித விளக்கம்!

**விழுப்புரம், ஜன. 29 -**

**விழுப்புரம் மாவட்டத்தில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று உரையாற்றும் போது “ ‘திராவிடம்’தான் நவீன தமிழ்நாட்டை உருவாக்கியது” என்றும் “கழக வரலாறு; சமூக நீதி - இடஒதுக்கீடு கட்டமைப்பிலானது” என்றும் பெருமிதம் பொங்க விளக்கமுடன் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.1.2025) விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை வருமாறு :-

விழுப்புரம் மாவட்டத்தில், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய விழா, கொள்கைக் குன்றம் ஏ.ஜி. என்று அன்போடு அழைக்கப்படக்கூடிய ஏ.கோவிந்தசாமி அவர்களின் மணிமண்டபம், சிலை திறப்பு விழா, இட ஒதுக்கீட்டிற்காக தன்னுடைய இன்னுயிரை ஈந்திருக்கக்கூடிய 21 தியாகச் செம்மல்களுக்கு மணிமண்டபமும், சிலையினை திறக்கக்கூடிய விழாவையும் இணைத்து நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

**விழுப்புரத்தின் இலக்கியப் புகழும் வரலாற்றுப் பெருமையும்!**

கடையேழு வள்ளல்களில் ஒருவரான காரி ஆட்சி செய்த மலையமான் நாடும், வீரத்தின் விளைநிலமான ராஜா தேசிங்கு ஆட்சி செய்த பகுதி இந்த விழுப்புரம் மாவட்டம்! இந்த விழுப்புரத்திற்கு எத்தனையோ இலக்கியப் புகழும் வரலாற்றுப் பெருமையும் இருக்கிறது...

- கல்வெட்டுகளுக்கு கல்தொண்டூர்!
- குடவரைக் கோயில்களுக்கு மண்டகப்பட்டு!
- பழைய கோயில்களுக்கு பனைமலை!
- பாறை ஓவியங்களுக்கு கீழ்வாலை!
- வரலாற்றுப் பெருமைக்கு திருவக்கரை!
- இலக்கியத்துக்கு தண்டபாணி சுவாமிகள்!
- நல்லாட்சியின் இலக்கணத்துக்கு ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்!
- திராவிட அரசியலுக்கு மதிப்பிற்குரிய ஏ.ஜி என அழைக்கப்பட்ட ஏ.கோவிந்தசாமி அவர்கள்.

இப்படி விழுப்புரம் மண்ணின் பெருமைகளைப் பட்டியலிட்டால் நாளும் பொழுதும் போதாது! அப்படிப்பட்ட இந்த மண்ணில் உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! பெருமைப்படுகிறேன்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.1.2025) விழுப்புரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், விழுப்புரம் மாவட்டத்தில் 35,003 பயனாளிகளுக்கு ரூ.323.71 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த விழா, திராவிட இயக்க தீரர் `ஏ.ஜி.’ என்று அழைக்கப்பட்ட மதிப்பிற்குரிய ஏ.கோவிந்தசாமி அவர்களின் சிலையுடன் கூடிய நினைவரங்கம் கட்டப்பட்டு அவருடைய திறப்பு விழா நடைபெற்றிருக்கிறது.

21 சமூகநீதிப் போராளிகளுக்கான மணி மண்டபத்திற்கான திறப்பு விழா. 35,000 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல். 425 கோடி மதிப்பிலான முடிவுற்ற பணிகளுக்கு திறப்பு விழா. 133 கோடி மதிப்பிலான பணிகளுக்கான அடிக்கல்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## துடிப்புமிக்க போராளி பொன்முடி!



**அமைச்சராக இருக்கக்கூடிய பொன்முடி அவர்கள் மாணவராக திராவிட இயக்கப் பாதையில் நடக்க தொடங்கி, இன்றைக்கும் துடிப்புமிக்க போராளியாக செயலாற்றக் கூடியவர்.**

**அவரைப் பற்றி தலைவர் கலைஞர் சொன்னதைத் தான் நான் நினைவுப்படுத்துகிறேன். “ஆழ்கடலில் கண்டெடுத்த நன்முத்து பொன்முடி!” அப்படிப்பட்ட பொன்முடி விழுப்புரம் மாவட்ட முன்னேற்றத்திற்காக பணியாற்றி வருகிறார். அவரை பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.**

## விழுப்புரம் மாவட்டத்திற்கான புதிய அறிவிப்புகள்!

விழுப்புரம் மாவட்டத்திற்கான 11 புதிய அறிவிப்புகளை நான் இங்கே வெளியிட விரும்புகிறேன்...

முதல் அறிவிப்பு - சாத்தனூர் அணையின் உபரி நீரை நந்தன் கால்வாயில் இணைப்பதற்கான ஊட்டு கால்வாய் அமைக்கவேண்டும் என்று செஞ்சி, விக்கிரவாண்டி, விழுப்புரம், வானூர், பென்னாத்தூர் மற்றும் திருவண்ணாமலை பகுதி உழவர் பெருமக்கள் பல ஆண்டு காலமாக கோரிக்கை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், 304 கோடி ரூபாய் செலவில் நந்தன் கால்வாய் திட்டம் செயல்படுத்தப்படும்.

இரண்டாவது அறிவிப்பு - விழுப்புரம் வட்டத்தில், கடந்த ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டு, வெள்ளத்தால் சேதம் அடைந்த, தளவானூர் அணைக்கட்டு 84 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும்.

மூன்றாவது அறிவிப்பு - கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில், சங்கராபரணி ஆற்றின் குறுக்கே, வழுதாவூர் அருகில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கப்படும்.

நான்காவது அறிவிப்பு - காணை மற்றும் கோலியனூர் ஒன்றியங்களில் இருக்கும் 29 கிராம மக்கள் பயன்பெறும் வகையில் 35 கோடி ரூபாய் செலவில் புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஐந்தாவது அறிவிப்பு - விக்கிரவாண்டி பேரூராட்சியில் இருக்கும் கக்கன் நகரில், ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், பல்நோக்கு சமுதாயக் கூடம் அமைக்கப்படும்.

ஆறாவது அறிவிப்பு - செஞ்சி மற்றும் மரக்காணத்தில் தலா 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படும்.

ஏழாவது அறிவிப்பு - திருவாமாத்தூர் அபிராமேஸ்வரர் கோயில் இடத்தில், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில், நான்கு கோடி ரூபாய் மதிப்பீட்டில், திருமண மண்டபம், சமையற்கூடம் மற்றும் உணவருந்தும் இடம் ஆகியவை அமைக்கப்படும்.

எட்டாவது அறிவிப்பு - விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலாமேடு பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், 5 கோடி ரூபாய் செலவில், திருப்பாச்சனூர் ஆற்றுப்படுகையிலிருந்து குடிநீர் வழங்கப்படும்.

ஒன்பதாவது அறிவிப்பு - விழுப்புரம் நகராட்சியின் பழம்பெரும் அலுவலக கட்டடம் 2 கோடி ரூபாய் செலவில் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில், டவுன் ஹால்ஆக மாற்றப்படும்.

பத்தாவது அறிவிப்பு - தென்னமாதேவி, அயனம் பாளையம் கிராமங்களில், பம்பை ஆற்றின் வடகரையில், சங்ககால தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிகளில் தொடர்ந்து அகழ்வாராய்ச்சி பணிகள் மேற்கொள்ளப்படும்.

பதினோராவது அறிவிப்பு - வீடூர் அணையிலிருந்து மயிலம், பாதிரப்புலியூர் வழியாகச் செல்லும் 15 கிலோ மீட்டர் சாலை 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

சமீப காலமாக நான் சுற்றுப்பயணம் செய்த மாவட்டங்களில், அதிக அறிவிப்புக்களை பெற்ற மாவட்டம் எந்த மாவட்டம் என்று கேட்டால் இந்த விழுப்புரம் மாவட்டம் தான்.

**- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

விழுப்புரம் மாவட்ட அரசு விழா - 28.01.2025